வடிக்கைகளைத் தொடர்ந்து என்னால் நடத்த முடியாமல் இருப்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து நடத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் உதவிடவில்லை என்பதற்காக என்னுடைய வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்திலே ஏற்கெனவே கலந்து கொண்டு என்ன பேசினார்களோ அந்த விவாதங்கள் மட்டும் அவை குறிப்பிலே இருக்கலாம்; பத்திரிகை குறிப்பிலே இருக்கலாம்; அதற்குப் பின்னாலே தொடர்ந்து முறைகேடாக தவறாக எழுப்பப்பட்ட கோஷங்கள் அத்தனையும் அவைக் குறிப்பிலிருந்தும் பத்திரிகைக் குறிப்பிலிருந்தும் நீக்கப்படுகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12–10]

மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பாராளுமன்ற நடவடிக்கையை நான் தெரிந்திருக்கிறேன் என்று சொன்னார்கள். அந்த நடவடிக்கை இதுதான் என்பதை இப்பொழுதுதான் நான் புரிந்துகொண்டேன் என்ற அளவிலே என்னுடைய வருத்தத்தைச் சொல்லி, பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், வணக்கம், நன்றி.

பின்னர் பேரவை பிற்பகல் 12–11 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

@112. 1976–77 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் (வரையறுக்கப் பெற்றது) 7-வது ஆண்டறிக்கையும், அதன் மீதான அரசின் மதிப்புரையும் 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/19/56) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

ஏதுமில்லை.

@ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 21(5) விதியில் கண்ட வரம்பு நிபந்தனையை ஒட்டி சட்டமன்ற நூலகத்தில் வைக்கப் பெற்றுள்ளன.